

# 5 ஊடகப் பிரதிநிதித்துவக் கல்வி




## நோக்கம்

ஊடகங்கள் மூலம் பல்வேறு விடயங்கள் பல்வேறு வடிவங்களில் முன்வைக்கப்படுகின்றன. செய்திகள், சங்கீதம், நாடகம், நகைச்சுவை நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், என்பன அத்தகைய சில மாதிரிகளாகும். இம்மாதிரிகளுக்கும் அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முகவர்களுக்கும் இடையிலான தொடர்பைச் சரியாக ஒரே பார்வையில் இனங்கண்டு கொள்ளும் தேர்ச்சி ஒவ்வொருவரிடமும் விருத்தியடைய வேண்டும். பொருளாதார சமூகத் தொடர்புகள், தொழிலும், உழைப்பும், அழகியல், மனித உரிமைகள், ஆண்பெண் சமூக நிலை ஆகிய பல பிரிவுகள் இதிலடங்கும். ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எமது வாழ்க்கைக்கு உதவும் நல்ல விடயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில், அந்த முகவர்களின் உண்மைநிலையையும், நியாயத்தையும் தர்க்க ரீதியாகச் சீர்தூக்கிப் பாரக்கவேண்டும். அத்தகைய பரிசீலனைக்கான தர்க்க ரீதியான அறிவாற்றலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான தேர்ச்சியை உங்களிடம் விருத்தி செய்வது இவ்வத்தியாயத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.

## அறிமுகம்

மனிதன் உலகில் தோன்றிய காலம் முதற்கொண்டே மானிடத் தொடர்பாடலும் தோன்றியது. மனித சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை ஆராய்வது தொடர்பாடலின் பரிணாம வளர்ச்சியை ஆராய்வதைப் போன்றதாகும் எனலாம். மானிட சமூகத்தின் விருத்தியுடன் தொடர்பாடல் ஒன்றிணைந்து காணப்படுவதே இதற்கான காரணமாகும். அது ஒரு இணைபிரியாத தொடர்பாகும். ஆயினும் வெகுஜன ஊடகம் கைத்தொழில் வளர்ச்சியிலேயே தோற்றம் பெற்றது.

வெகுஜன ஊடகம் அச்சு, இலத்திரனியல் என இருவகையாகப் பிரிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இலத்திரனியல் ஊடகத்தை செவிப்புல, கட்புல செவிப்புல, பல்லூடகம் எனவும் வகைப்படுத்த முடியும். பல்லூடகம் என்பது கட்புல, செவிப்புல எழுத்து ஊடகங்கள் இணைந்துள்ள இணையமாகும். இவ்வனைத்து விடயங்களையும் ஆராய்ந்து அதனை மானிடப் பரிணாமத்துடன் ஒப்பிடும் போது வெகுஜன ஊடகத்துக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டென்பது தெளிவாகும்.

சமூகமானது சிக்கலான ஓர் அமைப்பாகும். அது பல்வேறு தொடர்புகளினால் உருவானதாகும். இத்தொடர்புகள் வலை போன்று ஒன்றுடனொன்று கட்டுண்டுள்ளது. அத் தொடர்புகளின் அடிப்படையிலேயே சமூகம் நிலவுகின்றது. அத்தகைய தொடர்புகள் பல்வகைப்படும். அவை சிக்கலானதாகவும் இருக்கும். ஆயினும் அந்த அனைத்துத் தொடர்புகளும் தொடர்பாடற் செயலுடன் இணைந்துள்ளன. இவ்விணைப்பின் அடிப்படையாக இருப்பது அச்சமூகத்தின் கலாசாரமாகும். எனவே ஒவ்வொரு சமூகச் செயற்பாடும் அதற்கேயுரிய கலாசார அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

வெகுஜன ஊடகம் இச்சமூகக் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இச்சமூகக் கருத்துக்களை, சமூகக் குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் ஒருவரின் செயற்பாடு தொடர்பாக உள, கலாசார, செயலொழுங்கின் ஊடாகவும் சமூக கலாசாரம் என்ற வகையிலும் மனித நடத்தைகளின் துணையுடன் வரைவிலக்கணப்படுத்தலாம்.

ஊடக நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடும் போது இத்தகைய விளக்கமின்மையின் பெறுபேறாக அமைவது அவை எமது வாழ்க்கையில் மட்டுமன்றி மொத்த சமூகத்தின் மீதும் மோசமான தாக்கத்தைச் செலுத்துவதாகும். ஊடக நிகழ்ச்சிகளைத் தயாரிப்போர் இத்தாக்கம் பற்றிய பொறுப்புடன் கருமமாற்றுகின்றனரா என்பதைப் புலனாய்வு செய்யும் ஆற்றலும் பயனாளிக்கு இருக்க வேண்டும்.

## 5.1 சமூகப் பிரதிநிதித்துவக் கற்கை

ஊடகம் பல்வேறு மாதிரிகளூடாக பொதுமக்களை நெருங்குவதாக முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது. இம்மாதிரிகளை நீக்கிப் பார்க்குமிடத்து ஒவ்வொரு முன்வைப்புக்குள்ளும் உள்ள சமூகக் கருத்து எது என்பதைக் கற்பதே சமூகப் பிரதிநிதித்துவக் கற்கையாகும்.

உதாரணமாக செய்திகள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சமூகப் பின்னணி எது என்பது பற்றி ஆராய முடியும். சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளின் முதற் பக்கங்களில் பிரதான செய்திகளாக வருவது உணர்வு பூர்வமான தகவல்களாகும். குற்றங்கள், கொலைகள் பற்றிய செய்திகளாகவும் அவை இருக்கலாம். ஆனால் ஆங்கிலப் பத்திரிகையின் பிரதிநிதித்துவம் வேறுபட்டதாகும். சிலவேளை அதன் தலைப்புச் செய்தி அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் பற்றியதாக இருக்கலாம். ஒரே நாட்டில் பிரசுரிக்கப்படும் இப்பத்திரிகைகளில் சமூக பிரதிநிதித்துவம் வேறுபட்டதற்கான காரணம் என்ன? அது அப்பத்திரிகைக் கொள்வனவு செய்பவர்களைத் தூண்டும் காரணிகளுடன் தொடர்புபட்டதாகும். சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளின் வாசகர்களை பத்திரிகையை வாங்கச் செய்யவும் அதனை வாசிக்கச் செய்யவும் எத்தகைய சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும் என்பதை ஊடகவியலார்கள் தீர்மானிக்கின்றனர்.

மறுபுறமாக தொலைக்காட்சியில் ஓர் இசை நிகழ்ச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் எத்தகைய சமூக, கலாசாரப் பின்னணியைக் கொண்டவர்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இவ்விசை நிகழ்ச்சிகளில் பாடகர்கள் ஆடையணியும் விதம், அவர்களின் அங்க அசைவுகளின் இயல்புகள், அவர்களின் முகங்களில் தெரியும் விசித்திரங்கள், பாடல் வரிகள், அவை உச்சரிக்கப்படும் விதம், பயன்படுத்தப்பட்டுள்ள இசை, காட்சிகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ள கருத்துக்கள் போன்றவற்றைக் கவனமாக பரிசீலனை செய்து பார்த்தால் தெரிய வருவது, அவற்றில் பெரும்பாலான விடயங்கள் ஒரு குறிப்பிட்ட சமூக நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். அது நம்மையும் அந்த மேல் நாட்டு இசையின் பால் தூண்டுகிறது. இத்தகைய இசை நிகழ்ச்சிகளைத்தொடர்ந்து உருவாக்கும் போது எமது இரசனை உணர்வுக்கு என்ன நடக்கும்? பல்லுருக் கோலங்கள் மூலம் நடிகநடிகைகள், அறிவிப்பாளர்கள், விரிவுரையாளர்கள் தோன்றும் விதத்தை ஆராயும்போது ஒவ்வொரு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் சமூகப் பிரதிநிதித்துவத் தாக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். வானொலி, பத்திரிகைகளூடாகவும் இத்தாக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும் .

## அ) குடும்ப கட்டமைப்பு

குடும்பம் சமூக ஒழுங்கமைப்பில் மிகச்சிறிய அலகாகும். ஆயினும் அது சமூகத்தின் மிக முக்கிய அலகாகும். ஒரு குடும்பத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் நோக்கத்தை அடைந்து கொள்வதில் குடும்பத்தின் தொடர் பாடல் செயன்முறை முக்கிய இடத்தை வகிக்கிறது. அத்துடன் வெகுஜன ஊடகங்களினூடாக குடும்பக் கட்டமைப்பில் சீரான செல்வாக்கைச் செலுத்தக் கூடிய நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து கொள்வதும் ஒரு முக்கிய காரணியாகும்.

குடும்பம் என்பது சிறியதும் இயற்கையானதுமான ஒரு ஒழுங்கமைப்பாகும். அதன் கட்டமைப்பு உறவின் அடிப்படையில் அமைந்துள்ள அந்த உறவுகளை குடும்ப கட்டமைப்புக்குள் உள்வாங்கியிருப்பது எதனால்? புதிதாகப் பிறந்த குழந்தையின் உடல் உளப் போசாக்கை அடிப்படையாகக் கொண்டே ஆகும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால் அக்குழந்தையை உடல்ரீதியாக ஊட்டமளித்து சமூகத்திற்கும் பொருத்தமான பிரசையாக ஆக்குவதாகும்.

குடும்பத்தின் மூலம் எதிர்ப்பார்ப்பது சமூக நிலவுகைக்குப் பொருத்தமான அங்கத்தவர்களைத் தோற்றுவிப்பதாகும். அத்துடன் சமூக அங்கீகாரம் பெற்றுள்ள நன்மை தீமைகளை, விழுமியங்களை, பெறுமானங்களை புதிய அங்கததவருக்குக் கற்பிக்கும், வழங்கும் ஒரு பிரதான வழியாகவும் குடும்பம் திகழ்கிறது.


படம்:- 5.1.1
குடும்ப கட்டமைப்பு

குடும்பத்தில் சமூகமயமாக்கல் செயற்பாடு நடைபெறுவது தொடர்பில் நடத்தைக் கோட்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. அது தூண்டற் துலங்களில் தங்கியுள்ளது. அதாவது குடும்பச் சூழலில் அதன் உறுப்பினர்கள் குழந்தைக்கு வழங்கும் தூண்டல் மற்றும் குழந்தையின் செயற்பாடு குறித்துக் குடும்பத்தின் அங்கத்தவர்களின் துலஙகல் என்பதே இதன் மூலம் விளக்கப்படுகிறது.

ஒரு சமூகத்துள் பிரவேசிப்பது குடும்பத்தின் ஊடாகவே ஆகும். அது மிக உயர்ந்த, நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தும். உணர்வு நேசம், நம்பிக்கை, சுயதேடல், அர்ப்பணிப்பு என்பவற்றைக் குடும்ப உறவில் கண்டு கொள்ளலாம். நெருக்கமான உறவு என்பது இங்கு மிக முக்கியமாகும்.

கீழைத்தேச குடும்பங்களுக்கும் மேலைத்தேச குடும்பங்களுக்குமிடையே பல வேறுபாடுகள் உண்டு. மேலைத் தேசத்தவர்களின் தொடர்புகள், உணர்வுகள், பரஸ்பர இணைப்பு, எதிர்ப்பார்ப்புகள், பிரச்சினைகளை எதிர் கொள்ளல், தீர்மானம் எடுத்தல் போன்றவற்றில் இவ்வேறுபாடு தெளிவாகத் தெரியும்.

நாம் இங்கு கவனம் செலுத்த வேண்டிய விடயம் யாதெனில், எமது வெகுஜன ஊடகங்கள் எத்தகைய குடும்பமொன்றை எடுத்துக் காட்ட முயல்கிறது என்பது பற்றியாகும். அது உள்நாட்டுக் குடும்பக் கூட்டமைப்பா? வெளிநாட்டுக் குடும்ப கட்டமைப்பா? அது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தும் வகையிலான குடும்பக் கட்டமைப்பா? அல்லது சுயநலமிகளாக தத்தமது தனிப்பட்ட இலக்குகளை மட்டும் அடைந்து கொள்ளப்பாடுபடும் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பக் கூட்டமைப்பா? ஊடகங்கள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுவது இவற்றில் எந்தக் குடும்பத்தை என்பது தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு நடுநிலையான ஒரு மதிப்பீட்டைச் செய்ய வேண்டியது அவசியம்.

## ஆ) ஆண் - பெண் சமூகத்தன்மை

ஆண் பெண் சமூகநிலை பற்றிய எண்ணக்கரு 1970களிலேயே சமூக விஞ்ஞானத் துறையுடன் இணைந்து கொண்டது. இந்த எண்ணக்கரு மூலம் விளக்கப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் இச்சமூகம் உருவாக்கி ஒப்படைத்துள்ள பொறுப்புக்கள், பணிகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மரபு ரீதியான செயற்பாட்டுத் தொகுதியின் வகிபாகமாகும். அது சமூகத்தினால் உருவாக்கப்பட்டு விதிக்கப்பட்டுள்ள பணிகள், பொறுப்புக்கள், நடத்தைக் கோலங்களுடாகச் செயற்படும் ஒரு தெளிவுப்படுத்தல் அல்ல. அது சமூகத்தினால் உருவாக்கி ஒப்படைக்கப்பட்ட பணிகள், பொறுப்புகள் நடத்தைக் கோலங்கள் துணையுடன் அமையும் வரை விலக்கணமாகும். அதன்படி உயிரியல் ரீதியாக ஆணையும் பெண்ணையும் வெவ்வேறாக வரைவிலக்கணப்படுத்தினாலும் சமூகத்தில் வாழும் ஒருவர் என்ற வகையில் ஆணையும், பெண்ணையும் வெவ்வேறாக வரைவிலக்கணப் படுத்தமுடியாது என்பதே இங்கு கருதப்படுவதாகும்.

உலகின் முனனேறிய நாடுகளில் ஆண் பெண் சமூக நிலைக்கு பரந்த அடிப்படையில் சமமானதன்மை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நிலவும் சமூக பொருளாதார செயற்பாடுகளில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இச்சமத்துவத்தை நடைமுறையில் முழுமையாகக் காணமுடியாதுள்ளது. ஆனால் பொதுவாக நோக்கினால் கல்வி மற்றும் தொழில் துறைகளில் ஆண், பெண் சமூக நிலை பற்றிய ஒரு சிறந்த வரைவிலக்கணம் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது ஆண்கள் படிக்க வேண்டியவை, பெண்கள் படிக்க வேண்டியவை என்ற பாகுபாடு இல்லை. தமது விருப்புக்கும் ஆற்றலுக்குமேற்ப எதனையும் கற்பதற்கும் எந்த ஒரு தொழிலையும் செய்வதற்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் அவகாசமுண்டு என்பது இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஊடகங்களினால் இது எவ்வாறு பிரதிநிதித்துவப்படுகிறது? நாம் எதிர்பார்க்கும் நிலையை அடைவதற்கான மனப்பாங்கை விருத்தி செய்ய வேண்டியது ஊடகங்களின் பணியாகும். அதாவது ஆணையும், பெண்ணையும் சமமின்மையாக முன்வைக்கும் நிகழ்ச்சிகளின் அளவு குறைக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக அவர்களிடையே காணப்படும் பரஸ்பரத் தொடர்பும் , சமத்துவமும் வெளிக்காட்டப்படும் நிகழ்ச்சிகள் ஊடகங்களில் முன்வைக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக நடைமுறையிலுள்ள சமமின்மை விமர்சனத்துக்குள்ளாகும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஊடகங்களில் முன்வைக்கலாம். ஊடகப் பிரதி நிதித்துவங்களை ஆராயும் போது உண்மையில் ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பது பற்றிய உங்களது தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டும்.



படம்:- 5.1.2 கல்வி தொழில் வாய்ப்புக்காக ஆண் பெண் வேறுபாடு தாக்கம் தராது

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உள்ளக மாதிரி (Domestic) விசித்திரத்தன்மை வாய்ந்ததாக (Romantic) ஆவதற்கு காரணம் பெரும்பாலும் பெண்களை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதுடன் அவற்றைத் தயாரிப்பவர்களும் ஆண்கள் கோணத்தி-லிருந்து பெண்களைப் பார்க்கும் கண்களாலேயாகும். இத்தகைய நிகழ்ச்சிகள் காரணமாக பெண் என்பவள் மென்மையான, வீட்டு வேலைகளைச் செய்யும், குழந்தைகளை வளர்க்கும் அலங்காரமான ஒருவராக முன்வைக்கப்படும் வரைவிலக்கணங்களே அதிகரித்துள்ளன.

வெகுஜன ஊடகங்களில் ஏராளமான பெண்கள் தோன்றினாலும் அவர்களுள் தீர்மானமெடுக்கும் மட்டத்திலுள்ளவர் வெகுசிலரே. பெண்ணை வீட்டு எல்லைக்குள் மட்டுப்படுத்தி வைக்க ஊடகங்கள் முயற்சி செய்வதாக மானிடவியல் ஆய்வாளர்கள் குறை கூறுகின்றனர். வீட்டுப் பின்னணியில் பெண், சமூக ரீதியாக குறைத்து மதிப்பிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

பண்டைய சமூகத்தில் பெண் சமூகத்திற்குட்பட்டு வாழ்ந்ததாக அறிய முடிகிறது. பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க சமயத்தவர்களின் கோணங்களில் பெண் ஒரே விதமாக வரைவிலக்கணப்படுத்தப்படுவதுமில்லை.

ஊடகச் செய்திகளில் பெண்ணுக்கு இரண்டாம் இடமே கிடைக்கிறது. மலர்க்கண்காட்சி, கைப்பணி, சமையல் என்பவற்றோடு அவள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளாள். பெண் மற்றவருக்காக மறறவர்களைத் திருப்திப்படுவதற்காக இருப்பவளாக ஊடகங்கள் காட்டுகின்றன. விளம்பரங்களின் போது பெண் உருவம் பரந்த அடிப்படையில் பயன்படுத்தப்படுவதுடன் அங்கு அவர்களின் உருவம் விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. பெண்ணின் உன்னத பண்புகள் இத்தகைய விளம்பரங்களின் போது வெளிக்கொணரப்படுவது மிகவும் குறைவு. பெண்ணிடமுள்ள சமூகப்பணிகளில் ஈடுபடுமியல்பு அங்கீகரிக்கப்படல் வேண்டும். பெண்ணுக்குரிய சமூகத் தோற்றம் அவருக்குக் கிடைக்க வேண்டியிருப்பினும் இப்பணியில் இதுவரை முழுமையாக ஊடகம் இறங்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சமூகம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்தது என்பதால் அவர்கள் சரியாகப் பிரதிநிதித்துவப்படுகின்ற வகையிலான ஒரு ஊடகம் உருவாக்கப்படுவது அச்சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஏதுவாகும். ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியமன்று. அதற்கான ஒரு காரணம் ஊடகங்கள் தம்மைப் பயன்படுத்தும் விதம் பற்றியோ ஊடகங்கள் மூலம் தாம் காட்சிப்படுத்தப்படுகின்ற விதம் பற்றியோ போதிய விளக்கம் பெண்களிடம் காணப்படாமையாகும். சிலவேளை அவ்விதம் தாம் சித்தரிக்கப்படும் விதத்தை பெண்கள் விரும்புவதாகக் கூடத் தெரிகிறது. இதனால் இவ்வியல்பை தொடர்ந்தும் ஊடகங்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுவதற்கு ஊடகத்திற்கு அவகாசம் கிடைத்துள்ளது.

### இ) இனத்துவம்

இனத்துவம் என்பது சமூகக் கட்டமைப்பில் உள்ள ஓர் இயற்கையான அங்கமாகும். சமூகம் முன்னேற்றமடையும் போது இனத்துவத்தை விஞ்சி குடியுரிமை எண்ணக்கருவாக அது மாறும். எவ்வாறாயினும் உலகில் வாழும் ஒவ்வொருவரும் தனது இனத்துவம் பற்றிய பெருமிதத்துடன் அதனை மதிக்கவும் ஏனையவர்களின் இனத்துவம் பற்றி மதிக்கவும் சமூகம் பழக்கப்படல் வேண்டும். எவருக்கும் தான் சார்ந்த இனம் பற்றியும் கலாசாரம் பற்றியும் ஒரு பெருமிதத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆயினும் அது அதே போன்ற மற்றுமொரு இனக்குழுவை இழிவுபடுத்துவதற்கான காரணமாக அமையக் கூடாது.


படம்:- 5.1.3 இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடாகும்

இனம் என்பது ஒரு மொழி அல்லது சமயம் அல்லது பொதுகலாசாரத்தின் அடிப்படையில் இணைந்துள்ள மக்கள் கூட்டமாகும். இத்தகைய மக்கள் குழுக்கள் தமக்கேயுரிய தனித்துவத்துடன் வாழ்கின்றனர். மக்களின் உடற்தோற்றத்துக்கும் அவர்களின் ஆளுமை, நுண்ணறிவு, கலாசாரம் தொடர்பான இயல்புகளுக்குமிடையே காரண காரிய தொடர்புண்டு என்ற கருத்தின் அடிப்படையில் இனங்கள் தோன்றியுள்ளன இது ஒரு சமூக ரீதியான வகைப்படுத்தலாகும். ஒவ்வொரு சமூகமும் செலுத்தும் கவனத்தைப் பொருத்து இவ்வகைப்படுத்தல் நடைபெறும்.

ஓர் இனம் மற்றைய இனத்தைவிட உயர்ந்தது. அல்லது தாழ்ந்தது என்ற நம்பிக்கையினால் உருவாகும் இனவாதம், பரஸ்பர நம்பிக்கைக்கு அப்பாற் சென்று செயல் வடிவம் பெற முடியும். ஓர் இனம் மற்றைய இனத்தை இழிவுப்படுத்துதல், அவமானப்படுத்துதல், பொறாமை கொள்ளல், குரோதம்

காட்டுதல், குறைத்து மதிப்பிடல், ஓரங்கட்டல், உரிமைகளை மீறல், இம்சைப்படுத்துதல், தாக்குதல் என்பன இனவாதத்தின் இயல்புகளாகும்.

இனங்கள், பெரும்பான்மை, சிறுபான்மை, பெரும்பான்மை இனத்தவர், சிறுபான்மை இனத்தவர் என்று பாகுப்படுத்தப்படுவதும் இந்த அடிப்படையிலாகும். மனிதர், தனியாள் என்ற வகையிலும் சமூகம் என்ற வகையிலும் பல்வேறு விடயங்களால் வேறுபடுகின்றனர். கூட்டமாக வேறுபட்டு நிற்பது இனம் என்று வரைவிலக்கணப்படுத்தப்படும். அத்தகைய இனம் பேசும் மொழி, பின்பற்றும் சமயம் அல்லது வாழும் பிரதேசத்தைப் பொறுத்து இவ்வேறுபாடு ஏற்படும். ஆயினும் இனம் என்பது வரைவிக்கணப்படுத்துவதற்கு வேறுபட்ட பிரதேசத்தில் வாழ வேண்டும் என்றில்லை.

பொதுவான ஒரு ஆதிமனிதனின் வழித்தோன்றல்கள் தாம் என்பதை அடிப்படையாகக் கொண்டு தான் அவ்வினத்தைச் சேர்ந்தவர் என்று கருதும் தனியாள் கூட்டம் சமூக இனக்குழுவாகும். இக்குழுக்களில் காணப்படும் தனித்துவமான இயல்புகள் இனத்துவ தனித்துவம் உருவாக்குவதற்கான உரிமைகள், மற்றும் சுதந்திரம் என்பன வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள விதத்துக்கேற்ப கருமமாற்ற முடியும்.

ஊடக நிறுவனங்கள் தம் ஊடக உரிமையையும் அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்தி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதுடன் சிறுபான்மைக் குழுக்கள் தமக்குப் போதிய அளவு பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். தொலைக்காட்சி, வானொலி அலைவரிசையிலும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் தமக்குப் போதியளவு இடமோ, நேரமோ ஒதுக்கித்தரவேண்டுமென்பது அவர்களது கோரிக்கையாகும். இனவாத சமயவாத கலாசார அடிப்படைகளைக் கொண்ட பத்திரிகைகள், வானோலி தொலைக்காட்சி அலைவரிசைகள் உருவாவதும் இதன் பின்னணியிலாகும்.

இனவாதத்தை வெகுஜன ஊடகங்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துதலை நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்ய முடியும். நேரடியான பிரதிநிதித்துவம் சமூகத்துக்கு உடனே தெரியும். ஆனால் மறைமுகமாக நிகழும் பிரதிநிதித்துவம் அவ்வாறு தெரியாது. உதாரணமாக ஒரு நாட்டில் மூன்று இனங்கள் வாழ்வதாக எடுத்துக் கொள்வோம். எண்ணிக்கை ரீதியில் அவர்கள் சமமாக இல்லை. ஆயினும் இனங்கள் விளக்கப்படும் போது மூன்றும் அளவுரீதியாகச் சம அளவில் விளக்கப்பட வேண்டும். செய்திகள், கலந்துரையாடல்கள், சிறப்பு நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகளின் போதும் இத்தகைய சமப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதன் மூலம் அவ்வூடகத்தின் சமநிலைத்தன்மை தோற்றுவிக்கப்படும். ஆனால் எமது நாட்டு ஊடகங்களில் இச்சமநிலை பேணப்படுகிறதா? எமது நாட்டில் உதாரணம் எடுப்பதாயின் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற இனங்கள் சமமாக சித்தரிக்கப்படுகின்றனவா? சிங்கள மொழிமூலத்தில் ஒரு விதமாகவும், தமிழ் மொழி மூலத்தில் மற்றுமொரு விதமாகவும் இனத்துவம் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. இது ஒரு நாட்டுக்குகந்த ஊடகக் கொள்கையன்று.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

### ஈ) சமூக வகுப்புக்கள்

சமூக சமமின்மையின் பெறுபேறாகவே சமூக வகுப்புகள் தோன்றுகின்றன. ஒரு மக்கள் குழு சமூகத்தில் அவர்களின் இயல்பு காரணமாக பயன்களை அனுபவிக்கும் விதமும் அவர்கள் பெறும் பணிக் கொடைகள் சலுகைகளின் அடிப்படையில் அவர்கள் வகைப்படுத்தப்படல் சமூக வகுப்பு என வரைவிக்கணப்பட்டுள்ளது. இங்கு நாம் கவனம் செலுத்த வேண்டியது, எத்துணை முன்னேறிய ஒரு சமூகத்திலும் சமூக வகுப்பு காணப்படவே செய்யும். சமூக வகுப்பு தோன்றுவதற்கான பிரதான காரணி பொருளாதாரமாகும்.

வகுப்பு முறை என்பது சாதி முறை போன்று மூடப்பட்ட ஒன்றல்ல. சாதி என்பது ஒருவரது பிறப்பில் இருந்தே வருவதாகும். சமூக அவதானத்தில் அதைப் புறக்கணிப்பதன் மூலம் அதனை மாற்றிக்கொள்ள முடியும். சமூக வகுப்பு மாற்றக் கூடியநிலை ஒன்றாகும். தாழ் வகுப்புப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளையொன்று தன்னை வெற்றி கொள்வதனூடாக தம் வகுப்பு நிலையை மாற்ற முடியும். கல்வி, விசேடத்திறன்கள், பொருளாதார அரசியற்பலம் போன்ற காரணிகளினால் இதனை அடைய முடியும்.

சமூக வகுப்புப் பல்வகைமையானது, சமூக அபிவிருத்தியின் மீது செல்வாக்கு செலுத்தும். சமூகப் பதகளிப்பு, பிரச்சினைகள், குளறுபடிகள், வேலை நிறுத்தம் மற்றும் வன்முறைச் செயற்பாடுகளின் அடிப்படையில் வகுப்பு வாதச் செயற்பாடுகள் தோன்றுகின்றன. ஒவ்வொரு சிறு வகுப்பினரும் தத்தம் கோரிக்கைகளை வென்றெடுக்கப் போராட்டங்களை நடத்துவது சாதாரண நிகழ்வாகவுள்ளது.




படம் :- 5.1.4 சமூக வர்க்கப் பிரமிட்டு

குறிப்பாக ஆக்கரீதியான ஊடக நிகழ்ச்சிகளின் போது இச்சமூகவர்க்கங்கள் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றிய ஒரு பூரண விளக்கம் பயனாளிக்கு இருக்க வேண்டும். சமூகத்தில் ஒரு ஜனரஞ்சகமான அம்சமாக விளங்கும் தொலைக்காட்சி நாடகங்களை விமர்சிப்பதன் வழியாக இதற்கான அடிப்படையொன்றை அமைத்துக் கொள்ள முடியும். தொலைக்காட்சி தொடர்களில் சமூக வகுப்புகள் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன? அவ்வகுப்புக்ளை மேலும் சமூகத்தில் உறுதிப்படுத்த ஊடகங்கள் முயற்சிக்கின்றனவா? சமூக வகுப்புகளின் இடைவெளியை தொடர்ந்தும் பேண ஊடகங்கள் விரும்புகின்றனவா? ஒரு சமூக வகுப்பு மற்றொரு சமூக வகுப்பை விடச் சிறந்தவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றனவா? போன்ற பல வினாக்கள் இங்கு எழலாம்.

சமூக வகுப்பு உருவாவது பொருளாதாரக் காரணியின் அடிப்படையில் எனினும் அவ்வவ் சமூக வகுப்புக்குரிய தனித்துவமான இயல்புகள், நடத்தைக் கோலங்கள், தொழில் மற்றும் சமூகத் தொடர்புக் கோலங்கள் நிலவுவதை சமூகவியல் ரீதியில் விளக்க முடியும். இத்தகைய சமூக வகுப்புக்களுக்கிடையிலான இடைவெளியை இழிவளவாக்குதல் சமூக முன்னேற்றத்தின் போது நிகழவேண்டிய ஒன்றாகும். ஆனால் ஊடகங்கள் இவ்வேறுபாடுகளைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தவும், பேணவும் நடவடிக்கை எடுக்குமாயின் அதனால் சமூக அபிவிருத்திக்கு தடையேற்படும்.

வெகுஜன ஊடகங்கள் இவ்வகுப்பு இடைவெளிகள் மேலும் மேலும் ஏற்படுவதை தீவிரப்படுத்துவதைத் தவிர்த்து பொதுத் தேசியக் குறிக்கோளை நோக்கி அதனை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரச்சினைகள், மோதல்களின்போது பிழையான தகவல் படிவதைக் கட்டுப்படுத்துவதற்கான புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஆற்றல் ஊடகங்களுக்குண்டு.

## உ) குடியுரிமை

குடியுரிமை என்பதால் கருதப்படுவது ஒரு நாட்டில் பரம்பரையாகவோ, சட்டரீதியான பதிவு மூலமோ வசிப்பதாகும். குடியுரிமை பெற்றவர்களுக்கு அந்நாட்டின் மீது ஒரு பொறுப்புண்டு. பிரசையானவர் நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்பு செய்பவர். நாட்டை முன்னேற்றுவதற்கு தமது உழைப்பை வழங்குபவர்.

பிரசை என்ற எண்ணக்கரு ஜனநாயக சமூகத்திலிருந்தே பிறக்கின்றது. தெய்வ வரக்கோட்பாட்டின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் நியமனம் பெற்ற சமூகத்தில் குடியுரிமை காணப்பட்டாலும் அங்கு பிரசையின் பொறுப்பு ஜனநாயக சமூகத்திலுள்ள அளவுக்கு சக்தி வாய்ந்ததாக இல்லை. ஆட்சியாளரை நியமிக்கும் வாய்ப்பு அவர்களிடம் காணப்படாமையே அதற்கான காரணமாகும். இத்தகய

சமூகங்களின் ஆட்சியாளர்கள் தாம் தெய்வத்துக்கு மட்டுமே பொறுப்பு கூறவேண்டும் என்று கருதுகின்றனர். அனைத்து உலகியல் சமய ஒழுங்கமைப்புக்களின் அடிப்படை தெய்வச்சட்டங்களாகவே இருக்கும். ஆட்சியாளன் கடவுளின் பிரதிநிதி என்று மக்கள் நம்பினர். அரசனை தந்தையாகவும், மக்களை பிள்ளைகளாகவும் இச்சமூகத்தவர் கருதுகின்றனர்.

கிரேக்கத்தின் நகராட்சியில் இருந்த நேரடி ஜனநாயக சமூகத்தில் ஆண்கள் மட்டுமே குடியுரிமை பெற்றிருந்தனர். டிமோஸ் என்ற கிரேக்க பதம் முதிர்ந்த ஆண்களைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்பட்டது. அவர்கள் கிரேக்க பாரம்பரியத்தில் தூய்மையான வழித்தோன்றல்கள் என நம்பப்பட்டது. அதன்படி அச்சமூகத்தின் அடிமைகள், பெண்கள், சிறுவர்கள், வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறியோர் போன்றவர்கள் தூய்மையற்றவர்களாகவே கருதப்பட்டனர்.சகல பிரசைகளும் அரசில் நேரடியாகப் பங்கு பற்றினர். நேரடியாக வாக்குக்களை அளித்தனர். கலாசாரத்தைப் பாதுகாத்தனர். கலைப்பணிகளில் ஈடுபட்டனர். தத்துவக் கருத்துக்களை வெளியிட்டனர். ‘‘ஒருவரிடம் ஒரு கருத்து இருக்குமானால் அதனைத் தெளிவாக வெளியிடக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடின் அதில் பயனில்லை’’ என்ற எண்ணக்கரு அன்றைய கிரேக்க அரசுகளில் நிலவியது.

இக்கருத்துக்களுக்குச் சமாந்தரமாக இன்றைய சமூகத்தின் குடியுரிமை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். பிரசைகள் சிவில் உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள், பொருளாதார உரிமைகள் ஆகியவற்றை அனுபவிக்கின்றனர். அத்துடன் தனது நாட்டுக்குரிய பொறுப்புக்களைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெகுஜன ஊடகங்கள் குடியுரிமையையும் உரிமைகளையும் மதிக்க வேண்டும். அவ்வுரிமைகள் மீறப்படும்போது அவற்றுக்கெதிராக சவாலாக இருக்க வேண்டும். எதிராக குரல் கொடுக்க வேண்டும். பிரசைகளின் பொறுப்பை நிறைவேற்றுவதைத் தெளிவுபடுத்தவேண்டும்.

பிரசை என்பவன் ஒரு ஜனநாயக சமூகத்தின் சீரான நிலைப்பாட்டுக்கான அடிப்படை அலகு ஆவான். சர்வசன வாக்குரிமை மூலம் குடியுரிமை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சர்வதேசப் பொறுப்புகளின்படி உலகமக்களின் மேம்பாட்டுக்காகவும் பிரசைகள் பாடுபட வேண்டும். உலகமக்களைப் பாதிக்கும் விடயங்களில் பிரசைகள் ஆர்வம் கொள்ள வேண்டியது அதனாலாகும். ஆயுத பாவனை, நீர்வளத்தைப் பாதுகாத்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், என்ற அனைத்து விடயங்களிலும் பிரசைகளின் பொறுப்புக்கள் பரந்ததாகும்.

பிரசைகளின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாமையானது ஒரு சமூகத்தின் ஒழுங்கமைப்பின்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும். பிரசைகள் தமது சுயாதிபத்திய அதிகாரம் பற்றி நம்பிக்கை கொண்டுள்ளனர். அதாவது ஆட்சியாளன்.

நியமிக்கப்படுவது பிரசைகளாலேயாகும். பிரசைகளும் நாட்டுக்கான தம் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். பிரசைகளது உரிமைகளைப் பாதுகாக்கவே ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. இப்பரந்த தளத்தில் நின்று வெகுஜன ஊடகங்களின் வகிபாகத்தை விளங்கிக் கொள்வது முக்கியமாகும். அத்துடன் சமூகவியற் பின்னணியையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விதமாக ஊடகங்களினால் முன்வைக்கப்படும் பிரசைகளின் எண்ணக்கருக்கள் எவை என்பதை வரைவிலக்கணப்படுத்த வேண்டும். தமது நாடு தொடர்பாக பிரசைகளின் கடமைகள், பொறுப்புக்கள், மட்டுமன்றி பொறுப்பேற்றலை விருத்தி செய்தல் வெகுஜன ஊடகங்களின் பணியாகும். செய்திகள், தொலைக்காட்சி நாடகங்கள் போன்ற ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் மூலம் குடியுரிமை எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது என்பதை இனங்காண வேண்டுமெனில், அவற்றை கவனமாக பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

## ஊ) மனித உரிமைகளும் பொறுப்புக்களும்

மனித உரிமைகள் என வரைவிலக்கணப் படுத்தப்படுவது மனிதனுக்கு உரித்தான இயற்கையான உரிமைகளின் தொகுதியாகும். மனிதன் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், கௌரவமாக வாழ்வதற்கும் சுயமுன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் அவகாசமிருக்க வேண்டும். இவை, சமூக மரபு , ஒழுக்க மாண்புகள் போன்றே சட்ட ரீதியாகவும் சமூகத்தினாலும், அரசினாலும் தனியாள் நன்மைக்கும் சமூக நன்மைக்கும் தேவையான நிபந்தனைகளாகவும் உரிமைகளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

1789 இல் பிரான்சியப் புரட்சியினூடாக தோன்றிய அரசாங்கத்தில் மனித உரிமைகள் பற்றியும் பேசப்பட்டது. அமெரிக்க யாப்பிலும் இது காணப்பட்டது. 1776 இல் அமெரிக்காவில் மனித உரிமைகள் சட்டமாக்கப்பட்டது. அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்திலும் மனித உரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அசோக சக்கரவர்த்தியின் அரசியல் பிரகடனத்திலும் இதன் இயல்புகள் (லிச்சவீ இராசதானியிருந்து ஏழுதர்ம நெறியைப் போன்றே) காணப்பட்டன.

1948 டிசம்பர் 01ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சம்மமேளனத்தில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடன வாதத்தின் மூலம் இன்றைய மக்களின் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மனித உரிமைகளை புறக்கணித்தும் மறுத்துரைப்பதும் மனித இனத்தின் மனங்களைக் கடூரமாக வேதனைக்குள்ளாக்கும் மிலேச்சத்தனமான காரியங்களுக்கு ஏதுவாகும் என மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமயவாதத்தில் விளக்கப்பட்டுள்ளது. பேச்சுச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் மனிதன் வாழக் கூடிய உலகு பற்றி உன்னதமான பிரார்த்தனையை நிறைவேற்றும் மனிதத் தேவை இதில் அடங்கியுள்ளது.

கட்டாயத்துக்குட்படாது வாழுதல் இனங்களிடையே நட்புறவு, சமூக மேம்பாடு, உச்ச சுதந்திரத்தை அனுபவிக்கும் மகிழ்ச்சிகரமான நிலைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளுதல் உட்பட அடிப்படை மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் அதில் அடங்கியுள்ளன.

சுதந்திர அரசுகள் தம் அரசியல் யாப்புகளில் மனித உரிமைகள் பற்றிய சரத்துக்களை உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன. இலங்கையின் அரசியல் யாப்பில் பேச்சு, கருத்து வெளியீட்டு, கூட்டம் கூடும், இடத்துக்கிடம் பிரயாணிக்கும், தொழில் செய்யும், சமயத்தைப் பின்பற்றும், கலாசாரத்தைப் அனுபவித்தல் ஆகிய சுதந்திரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை அனைத்துப் பிரசைகளுக்குமுரிய அனுபவிக்கும் உரிமைகளாகும்.

இந்த உரிமைகளை அனுபவிப்பதற்கு இணைவாகவே வெகுஜன ஊடகங்கள் கருமமாற்றுகின்றன. சுதந்திரம் என்பது நியாயமான ஓர் உரிமையாகும். ஒரு நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படும் சட்டங்கள் அந்த நாட்டில் பரிணாமமடைந்துள்ள விழுமியங்கள், பண்பாட்டுத் தொகுதிக்கமைய வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டும்.

சமூகத்திற்கு தீங்காக அமையாத வகையில் ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஊடகங்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் மனித உரிமைகள் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பொறுத்து மனித உரிமைகளின் வளர்ச்சிக்கு அல்லது வீழ்ச்சிக்கான செல்வாக்கை செலுத்த முடியும்.

## 5.2 பொருளாதார பிரதிநிதித்துவ நிறுவனங்கள்

பொதுவாக நோக்குமிடத்து ஒரு நாட்டின் பொருளாதார விருத்திக்கு ஊடகத்தின் பங்களிப்பு அவசியம். நேர் மனப்பாங்குகளை விருத்தி செய்வதன் மூலமே அதனைச் செய்ய வேண்டும். சமூகத்தில் பல்வேறு பொருளாதார சீர்கேடுகள் இருக்கலாம். ஆயினும் அவற்றை எப்போதும் தூக்கிப் பிடித்துக் காட்டுவதன் மூலம் சமூகத்தின் பொருளாதார விருத்திக்குத் தடைகள் ஏற்படலாம். பொருளாதார நிதித்துவத்தை ஆராய்வதற்காக தெரிவு செய்யக் கூடிய சில துறைகள் பின்வருமாறு.

### அ) தொழில் உலகம்

அன்றாட வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான திறன்கள் மனிதரிடத்தில் இருக்க வேண்டியது அவசியம். மனிதத் தேவைகளை நிறைவேற்றும் தொழில்சார்திறன் களை வினைத்திறனுடன் ஆற்றும் விதத்தில் மக்களின் திறன் விருத்தி தொடர்பாக

பொருத்தமான தொழில் கல்வியை ஆரம்பித்தல் இவ்வேலையுலகத்திற்கு பழக்கப் படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.

தொழில் உலகிற்குப் பொருத்தமான பிள்ளைகளை உருவாக்கும் அவசியத்தை கன்னங்கரா கல்விச் சீர்த்திருத்தம் நன்கு சுட்டிக் காட்டியது. மகாத்மா காந்தி அறிமுகப்படுத்திய கல்வித் திட்டத்திலும் இவ்விடயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. ஒரு மனிதன் பிறப்பது வாயுடனும் வயிற்றுடனும் மட்டுமல்ல என்று காந்தி குறிப்பிட்டார். தலையுடனும் இரு கைகளுடனும் சேர்த்து பிறக்கின்றான். கல்வியானது இத்தலையையும் கைகளையும் போசிப்பதில் வெற்றி பெற வேண்டும். காள்மாக்சின் கல்விச் சிந்தனையில் உழைப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்ததுடன் வேலையுலகு உழைப்பை அடிப்படை யாகக் கொண்டே உருவாக்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தொழில் உலகம் பற்றிய எண்ணக்கரு வெறுமனே உழைப்பை விரயமாக்குவது பற்றிய ஒரு விடயமன்று. தொழில்களுக்காக விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் அதிலடங்கும். சமூகத்தின் நிலவுகைக்கு பல்வேறு தொழில் வாண்மையினை உடையவர் தேவைப்படுகின்றனர். அதனை வழங்குவதற்கு கல்வி தேவை. தனது வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை உழைப்பையும் தொழில் தேவையையும் ஒருவன் வேண்டி நிற்கின்றான். இது காலத்துக்கு காலம் வேறுபடும். ஒவ்வொரு தொழிலுக்குமான தகைமைகளில் வேறுபாடுண்டு. அவற்றை அடைந்து கொள்ள வேண்டும். இன்றைய சமூகத்தின் வேலையுலகு கைத்தொழில், கணினி, தொழினுட்பம் ஆகிய துறைகளிலும் பரிணமித்துள்ளது. வெகுஜன ஊடகம் இவற்றின் பின்னணிகளையும் இயல்புகளையும் தெளிவுபடுத்த வேண்டும்.

வேலையுலகத்தில் பல்வேறு தொழில்களுக்கான தேவைகள் உள்ளன. இவை அரச, தனியார் துறைகளில் பரந்திருப்பதுடன் இவற்றை இனங்கண்டு கொள்ள வேண்டியுள்ளது. அது பற்றிய அறிவைப் பிரபல்யப் படுத்த வேண்டும். இத்தகைய நிறுவனங்களில் நிர்வாகக் கட்டமைப்பு அதிகார இயல்பு, மரபுகள், என்பவற்றை விளங்கிக் கொள்வது முக்கியமானது. வேலையுலகின் போக்குகள் நாளுக்கு நாள் மாறும். தொழினுட்ப மாற்றங்களுடன் மட்டுமன்றி அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கேற்ப அவை வேறுபடும். தொழில்களின் போது தன்னிடமுள்ள பலத்தை விளங்கி அதன்படி இசைவுபெற வேண்டிய தேவையுள்ளது. தொழிலுக்கான பண்புகளைத் தம்மிடத்தே விருத்தி செய்து கொள்ள மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்ளல் மட்டுமன்றி , தொழில்களுக்காக விண்ணப்பித்தல், விண்ணப்பங்களைத் தயார் செய்தல், பொருத்தமான ஆளுமையை உருவாக்கிக் கொள்ளல் என்பனவும் முக்கியமானவையாகும்.

வெகுஜன ஊடகங்கள் இதற்கு வழிகாட்ட வேண்டும். வேலையுலகில் வாண்மைத் தொழில்கள், தொழில் நுட்பத் தொழில்கள் மீதாக மக்களிடையே

விருப்பைத் தோற்றுவிக்கும் விதத்திலும் அவற்றுக்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் வகையிலும் வெகுஜன ஊடகங்கள் கருமமாற்ற வேண்டும். இதன்படி எமது நாட்டின் தொழில்துறை, நிலமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்குகளின் அடிப்படையை விருத்தி செய்தல் ஊடகங்களின் பொறுப்பாகும்.

### ஆ) பல்வேறு தொழில்கள்

வேலையுலகு பற்றி நிலவும் ஒரு சிறப்பான நிலை யாதெனில்,, சமூக வகுப்புடன் தொடர்புபடுத்தி வரைவிலக்கணப்படுத்துவதாகும். உடல் உழைப்பை அதிகம் விரயம் செய்வோர், சமூக வகுப்பின் மத்திய மற்றும் தாழ் மட்டத்தில் இருப்பதுடன் மற்றைய உளரீதியான உழைப்பை அதிகம் விரயமாக்குவோர் உயர் மற்றும் உயர் மத்திய வர்க்கத்தவர்களாக உள்ளனர். இதன்படி ஒவ்வொரு தொழில் குறித்தும் ஒரு வர்க்க வரைவிலக்கணம் சமூகத்திற்குண்டு. சில தொழில்கள் உயர்வான ஜனரஞ்சகமான தொழிலாகக் கருதப்படுவதோடு. வேறு சில தொழில்கள் உயர்விலும் ஜனரஞ்சகத்திலும குறைந்ததாக கருதப்படுவதும் இதனாலேயாகும்.

குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் இலங்கையில ஒவ்வொரு தொழிலில் ஈடுபடுகின்றவர்களிடையேயும் சமூகத் தொடர்பு, தொடர்பாடற் கோலம், வாழ்க்கைக் கோலம் என்பவற்றுக்கிடையே யும் வேறுபாடுகளைக் காணலாம். முன்னேற்றமடைந்த நாடுகளின் நிலைமை வேறுபட்டதாகும். தொழில் என்பது பணம் உழைப்பதற்கான வழியாக இருப்பதுடன் சமூகத்தின் வகுப்பு அடிப்படையில் பாரிய வேறுபாடுகளைக் கொண்டதல்ல.

இந்த வகையில் எமது ஊடகங்களில் எமது தொழில் உலகம் முன்வைக்கப்படுவது நேர்மனப்பாங்கிலா, மறை மனப்பாங்கிலா என்பதை நாம் வரைவிலக்கணப்படுத்திக் கொள்ளவேண்டும். வர்த்தக சமூகத்தில் சில தொழில்கள் தாழ்ந்ததாகவும், வேறுசில தொழில்கள் உயர்ந்ததாகவும் தொடர்ந்திருப்பதற்கு ஊடகங்கள் உதவுமேயானால் அது பொருத்தமற்றதாகும். எனினும் ஊடகங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது இது உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஒரு நாட்டின் செயற்பாட்டிற்கும் இருப்பிற்கும் பல்வேறு தொழில்களின் தேவைப்பாடு அவசியமாகிறது. கல்வியூடாக இத்தகைய தொழில்களுக்குத் பொருத்தமானவர்களை உருவாக்குதல் அவசியமாகிறது. கல்வி பொருளாதார அபிவிருத்தியின் ஓர் அத்தியாவசிய அங்கமாகக் கணிக்கப்படும் போக்கு மிகஅண்மைக் காலத்திலேயே ஏற்பட்டது. ஓரிரு தசாப்தங்களுக்கு முன்பு வரை கல்வி சமூக நல சேவையாகவும், நுகர்வு செயற்பாடாகவும் நாட்டின் அரிதான உற்பத்தியான நிதி வளங்களின் மீதான ஒரு சுமையாகவும் கருதப்பட்டது.

இது இன்று ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கல்விக்கான செலவு எதிரகாலத்திற்கான முதலீடாகவே இன்று கருதப்படுகிறது. ஒரு நாட்டின்

அபிவிருத்தியில் மிக முக்கிய வளம் மனித வளமாகும். பயிற்றப்பட்ட மனித வளம் என்பது அரிய மூலதனமாகும். இயற்கை வளங்கள், வெளிநாட்டு உதவிகள், சர்வதேச வர்த்தகம் ஆகியன அனைத்தையும் விடப் பெறுமதி வாய்ந்தவையாக இவை கருதப்படுகிறன. இன்றைய சமூகத்தில் தொழில்கள் அளவு ரீதியாகவும், தொழினுட்ப ரீதியாகவும் விருத்தியடைகின்றன. இத்தொழில்களுக்கேற்ற விதமாக மனிதவளம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

எந்த ஒரு தொழிலையும் உயர்ந்தது, தாழ்ந்தது என்று வகைப்படுத்த வேண்டியதில்லை. ஒவ்வொரு தொழிலும் ஒன்றோடொன்று வலைப்பின்னலாகத் தொடர்புபட்டுள்ளது.

சில தொழில்களைத் தாழ்ந்தவையென தள்ளிவிட்டால் அது சமூக நிகழ்வுக்கான பெரும் சவாலாக மாறும். தொழில்களுக்கிடையிலான இடைவெளிகளை இழிவளவாக்குவதன் மூலம் இந்நிலையை ஏற்படுத்தும் மனப்பாங்குகளைத் தோல்வியடையச் செய்ய ஊடகத்தால் முடியும்.

எந்த ஒரு தொழில் குறித்தும் பெற்றுக் கொள்ளும் பாண்டித்தியமும் தேர்ச்சியும் அத்தொழிலைச் செய்பவரின் இருப்புக்கு அத்தியாவசியமாகும். எதிர்காலம் எத்தகைய தொழில் தேவைகளை வேண்டி நிற்கிறது என்பதைத்திட்டமிடுவதும் அதற்கான ஊழியர்ளைப் பயிற்றுவிப்பதும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வதற்கான அத்தியாவசியக் காரணிகளாகும்.

ஊடகத்தின் பொறுப்பு உழைப்பின் மீதான ஒரு அபிமானத்தை ஏற்படுத்துதலாகும். அத்துடன் சமூகத்தில் நிலவும் மரபு ரீதியான காலங் கடந்த எண்ணக்கருக்களை உடைத்தெறிந்து பட்டியலிடப்பட்ட சில தொழில்களுக்கப்பாற் சென்று வேறு பல தொழில்களை சமூகத்துக்கு அறிமுகப்படுத்தும் பணியை ஊடகங்கள் மேற்கொள்ள வேண்டும்.

### இ) சந்தை

நுகர்வோரும் வர்த்தகமும் சந்திக்குமிடமே சந்தை. நுகர்வோர் தம் தேவைக்கேற்ப சந்தையில் பொருட்களைத் தெரிவு செய்து கொள்வனவு செய்கிறார் என்பது பொதுவான ஒரு கருத்தாகும். வர்த்தகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது போட்டி அதிகரிக்கும். பொருட்களின் விலை குறையும் என்பதும் தரமான பொருட்களைக் கொளவனவு செய்யும் வாய்ப்பு நுகர்வோருக்கு ஏற்படும் என்பதுவும் ஒரு தர்க்கரீதியான காரணியாகும். ஆயினும் இது எப்போதும் சாத்தியமாக இல்லை.

சந்தையையும் வெகுஜன ஊடகத்தையும் நோக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்களுண்டு. அதாவது விளம்பரம் மூலம் உற்பத்தியாளன் நுகர்வோரிடையே தேவையை உருவாக்குகின்றான். விளம்பரத்தினால் நுகர்வோன் பொருட்களை தெரிவு செய்யத் தூண்டப்படுவதுடன் அங்கே உற்பத்தியாளரின் நோக்கத்தை நிறைவேற்ற விளம்பரத்தால் முடிகிறது. ஒரு பொருளின் தரத்தினால் அன்றி அதன் விளம்பரம் காரணமாக நுகர்வோரின் தெரிவும் அதன் விலையும் தீர்மானிக்கப்படுகிறது.

பொருட்கள், சேவைகளுக்கான விலை, கவர்ச்சி, விளம்பரத்தினால் தீர்மானிக்கப்படுவதால் பல்தேசிய கம்பனிகளுக்கு உள்நாட்டு சந்தையை ஆக்கிரமிப்பது இலகுவாகின்றது.



படம்: 5.2.1 பொருள், சேவை, விளம்பரம்

நுகர்வோருக்கு புதிய சந்தைப் பெறுமானத்தை வழங்கவும், தேவையற்ற பொருட்களை தேவையான பொருட்களாக மாற்றவும் வெகுஜன ஊடக விளம்பரங்கள் ஆற்றல் பெற்றுள்ளன. இதன்படி வெகுஜன ஊடகம் நுகர்வோரின் சந்தையை உற்பத்தியாளரின் சந்தையாக மாற்றியுள்ளது.

வெகுஜன ஊடகத் தகவல்களும் ஒரு சந்தைப் பொருளாக மாறியுள்ளது. தகவல்களைச் சேகரித்தல், விநியோகித்தல் ஒரு இலாபமுறைக்குரிய வணிகமாக மாறியுள்ளது. இணையத்தின் தோற்றத்துடன் தகவற் சந்தை விரிவடைந்துள்ளது. தற்கால உலகமயமாக்கலை முன்னெடுத்து செல்லும் ஒரு ஊடகமாக இணையமும் வெகுசன ஊடகமும் விளங்குகின்றன.

பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் மனப்பாங்கை மட்டுமன்றி ஒரு சந்தைக் கலாசாரத்தை தோற்றுவிக்கவும் விளம்பர நிகழ்ச்சிகள் உதவுகின்றன. சந்தைப் பொருளாதாரம் சார்ந்த மனோபாவம் உருவாவதன் காரணமாக நீண்ட காலத்தில் உள்நாட்டு உற்பத்திகளின் பெறுமதி சவாலுக்குள்ளாகும் ஆபத்துமுண்டு.

இலாபமே முக்கிய இலக்கு என்பதாலும் அதிகரித்த போட்டியாலும் விழுமியங்கள் சமூகப் பெறுமானங்களைப் புறக்கணித்து பாலியலையும், வன்முறையையும் முதன்மைப்படுத்தி ஊடக விளம்பரங்கள் உருவாகின்றன. ஒழுக்க மாண்புகள் புறக்கணிக்கப்படல், பல்வேறு கொள்கைகள் கருத்துக்களை நோக்கி மக்கள் மனதை அடிமைப்படுத்துவதும் சந்தைப் பொருளாதாரத்தில் விளம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுவும் ஊடகங்களின் வழக்கம். இதனால் உள்ளூர் பொருளாதாரம் நலிவடைந்து பல்வேறு சமூக கொந்தளிப்பு நிலமைகள் ஏற்படவும் இடமுண்டு.

சமூகப் பொறுப்புக்கோட்பாட்டு ரீதியான பின்னணியிலுள்ள மக்களையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் பொறுப்பு ஊடகவியலாளருக்குண்டு. விளம்பரமானது, மாயாஜாலம் போன்று சந்தைத் தேவைகளுக்குப் பொருத்தமான பொருட்களையும் சேவைகளையும் கவர்ந்து கொள்ளும் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஈ) அபிவிருத்திக்கான சிந்தனை

அபிவிருத்தி என்பது பரந்ததொரு முழுமையான எண்ணக்கருவாகும். ஆன்மீக, சமூக, கலாசாரப் பெறுமானங்களுடன் கூடிய ஒரு சமநிலையான விருத்தியாகும். ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியின் மூலம் மட்டும் உரிய நோக்கங்களை அடைய முடியாது. அபிவிருத்திசார் தொடர்பாடல் சிந்தனை என்பது அபிவிருத்தியைப் பெறும் நோக்கில் தொடர்பாடலை உபயோகிப்பதாகும். இதன் மூலம் பொருத்தமான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அபிவிருத்திசார் சிந்தனையில் அடைவு ஊக்குவிப்புக் கோட்பாட்டின் படி ஒவ்வொருவரிடமும் அதிசிறப்பை அடையும் ஆசை ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. செயலடைவுகளுக்காக சவால்களை ஏற்றுக் கொள்ளவும் எச்சரிக்கை ஆபத்துக்களை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறவும், சிரமங்களுக்கு மத்தியில் வெற்றி பெறவும் ஆயத்தமாக வேண்டியது முக்கியமாகும். அபிவிருத்தி சார் தொடர்பாடற் சிந்தனை என்பது மனசாட்சியுடன் கூடிய தொடர்பாடல் எனக் கூறலாம். ஒரு நாட்டின் மக்களிடையே அபிவிருத்திக் கருத்துக்களை பயன்படுத்துவதற்காக இதனூடாக பாரிய பங்களிப்பைச் செய்யலாம்.

அபிவிருத்தி தொடர்பான அதிர்ச்சியான சிந்தனையொன்றை ஏற்படுத்துதல் இதன்மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சமூகத்தில் நிலவும் பேதங்களைக் களைந்து மக்களிடையே நெருக்கத்தை விருத்தி செய்யவும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்களை நெறிப்படுத்தவும் இதன் மூலம் அவகாசம் கிடைக்கும். இதன் மூலம் ஒரு சமூக மாற்றம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இங்கு சமூகத் தொகுதிக்குள் புதிய எண்ணக்கருக்கள் புகுத்தப்படுகின்றன. இதன்மூலம் சமூக ஒழுங்கமைப்புகளில் மேம்பாட்டை ஏற்படுத்தலாம்.

சுதந்திர ஊடகங்களிலும் செயற்பாடுகளிலும் மக்களைத் தொடர்புபடுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டுப் பின்னடைந்துள்ள பிரிவினர்க்கு சுயபலத்தைப் பெற்றுக் கொடுத்தல் இவ்வபிவிருத்திசார் சிந்தனை மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. தமது பலத்தின் மீது நம்பிக்கை வைத்து எழுந்து நிற்க அதன் மூலம் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

வெகுஜன ஊடகத்தைப் பகுப்பாய்வு செய்யும் போது இவ்வபிவிருத்திசார் சிந்தனை பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உங்களால் உணர முடிகிறதா? ஒரு பாடல், செய்தி, நாடகம், அல்லது வேறு ஒரு நிகழ்ச்சி மூலம் இதை முன்வைக்க முடியும். அபிவிருத்திசார் சிந்தனையைத் தொடர்ச்சியாக ஊடகங்கள் மூலம் மக்கள் மயப்படுதுவதனால் மக்களிடையே அபிவிருத்தி தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

## 5.3 சமய மற்றும் பண்பாட்டுப் பிரதிநிதித்துவக் கற்கை

சமயத்தைப் போன்றே பண்பாட்டுகளும் சமூக நிலவுகைக்கான தேவைகளாகும். பல சமயங்களுண்டு. அவ்வேறுபாட்டின் அடிப்படையில் பண்பாட்டையும் வரைவிலக்கணப்படுத்தலாம். மனித சமூகத்தின் பல்வேறு சம்பவங்கள், நிகழ்வுகளே ஊடகங்களினால் முன்வைக்கப்படுகின்றன. இதனூடாக சமய, பண்பாடு நம்பிக்கைகளை சிதறடிக்கவும் ஊடகங்களால் முடியும். ஆயினும் சமய அதிகார பீடங்கள் பலம் வாய்ந்ததாக இருப்பதனால் ஊடகங்கள் அவற்றில் கைவைக்கப் பின்வாங்குகின்றன. ஊடகம் எப்போதும் ஒழுக்க விழுமிய நம்பிக்கையிலேயே கை வைக்கிறது. எனவே ஊடகங்களினால் முன்கைவக்கப்படும் சமய மற்றும் ஒழுக்க விழுமிய எண்ணக்கருக்கள் எவை எனத்தேடிப் பார்த்தல் அவசியமாகும்.

### அ) சமயங்கள்

சமயம் ஒரு தத்துவமாக அல்லது வாழ்க்கை முறையாக அல்லது ஒரு நம்பிக்கைத் தொழிலாக அறிமுகம் செய்யப்பட்டாலும் அது நிச்சயமாக நிலவும் சமூகத்தினூடாக தொடர்புபடுவதைக் வலியுறுத்த வேண்டும். சமயங்களின் தோற்றம் பற்றி சமூகவியலாளர்களிடையே பல்வெறு கருத்துக்களுண்டு. சமயங்களால் நிறைவேற்றப்படும் சமூக செயற்பாடுகள் எவை என்பதே எமக்கு முக்கியமாகும். சமயத்தினால் நிறைவேற்றப்படும் சமூகக் கருத்துக்கள் முக்கியமானவை என்பது வலியுறுத்திக் காட்ட வேண்டியது அவசியம். சமயம் மக்களை ஒழுங்குபடுத்துகிறது என்பது முக்கியமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம் ஆகும்.

சமயம் என்பது, 'தூய்மையானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகள்,வழிபாடுகள் தொகுதியொன்றைச் சுற்றிப்பின்னப்பட்ட நிலைப்பாட்டுடன் கூடிய நம்பிக்கைகள் வழிபாட்டு முறைகள் மூலம், சமூகத்திலுள்ள அனைவரையும் ஒரே விழுமிய சமுதாயமாக ஒழுங்கமைக்கின்ற ஒரு நிறுவனமாகும்.

சமயம் சமூகத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. கலாசார நாகரீகங்கள் ஏற்படுவதில் சமயத்தின் பங்கு சக்தி வாய்ந்ததாகும். சமூகத்தின் அங்கத்தவர்களை ஒரே நோக்கத்துடன் தொடர்புபடுத்தி வைத்திருப்பதில் சமயத்தின் பணி அளப்பரியது எனக் கூறலாம். சமயம் தூய்மையானதென்றும் சிரேஷ்டமான தெனவும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு அது உயர்வானதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எத்துணை ஆரம்ப நிலையாக இருப்பினும் ஒரு சமயமோ வாழ்க்கை விதிமுறைகளோ அற்ற ஒரு மக்கள் குழுவைக் காண முடியாது.

அனைத்து சமயங்களிலும் ஜனரஞ்சகமான சில அம்சங்களைக் காணலாம். அவை சமயக் கொள்கை அளவுக்குப் பெறுமானம் மிக்கதாக இல்லாவிடினும் சமயத்தின் நிலவுகைக்கு அவை முக்கியமானவையாகும். புத்த சமயத்தில் தானம், கொள்கை வழிபாடு ஆகிய இரண்டில் கொள்கை வழிபாடு பெறுமானம் மிக்கது என்பது உண்மையாகும். ஆனால் புத்த சமயத்தைச் சுற்றி மக்களை இணைத்து வைத்திருப்பது அதன் பூஜைகளும், வழிபாடுகள் மரபுகளேயாகும். ஏனைய சமயங்களான இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றிலும் இவ்விடயம் பொதுவானதாக காணப்படுகின்றது.

மக்களை சமயத்துடன் நெருங்கச் செய்யவும் சமயப் பெறுமானங்களை ஒருவரிடம் வளர்த்திடவும் ஊடகங்கள் நிகழ்ச்சிகளை முன்வைக்க முடியும். சமய அறிவையும் விளக்கத்தையும் விருத்தி செய்யவும், வெகுஜன ஊடகங்கள் பங்காற்ற முடியும் . சமய நம்பிக்கைகளை மதிப்பதும் அவற்றை உறுதிப்படுத்துவது வெகுஜன ஊடகங்களின் பொறுப்பாகும். ஏனெனில் வெகுஜன ஊடகங்கள் இருப்பது மக்களுக்காகவே ஆகும். சமயம் தொடர்பான சில எல்லைகள் பற்றிய விளக்கத்தைத் கொடுப்பதற்கும் ஊடகத்துக்கு உரிமையுண்டு. அதுவும் மக்களின் நன்மைக்காகவே இருக்க வேண்டும்.

பல்லின சமூகம் என்ற வகையில் இலங்கையில் பல்லின, பலமத அடிப்படையானது வெகு ஜன ஊடகங்களினால் வெளிப்படுத்தப்படுகின்றதாவென்பது ஆய்வுக்குரிய விடயமாகும். சமூக, சமய புரிந்துணர்வுக்கு அது அவசியமாகும். அவ்வாறே அதன் மூலமாக சமூகத்திலுள்ள அனைவருக்கும் நியாயம் வழங்கிட முடியும்.

### ஆ) பண்பாடு மற்றும் விழுமியம்

பண்பாடு என்பது சரியான நடத்தையாகும், நன்மைத் தனம்மிக்க வாழ்க்கையாகும். நல்ல பண்புகளின் நடத்தைகளுமாகும். சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு பண்பாட்டு நிலைப்பாடு முக்கியமாகும். பண்பாட்டு நிலைப்பாடு சமூக அங்கீகாரங்களை பெறுமானங்களின் நன்மை தீமைகளுக் கிடையிலான வேறுபாட்டைத் தெளிவாக விளக்கும். இதன்படி பண்பாட்டுப் பெறுமானத் தொகுதி, சமூகத்துக்குத் தேவையான நடத்தைக் கோலம் நெறிப்படுத்தப்பட வேண்டிய விதம் பற்றி தனியாள் ஒருவருக்குக் காட்டுவதுடன் ஒரு சமூகம் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும். பண்பாட்டின் இயல்புகள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடலாம். அவற்றை அங்கீகரிக்கின்ற பாதுகாக்கின்ற ஒரு ஊடகமே எமக்குத் தேவையாக உள்ளது.

பண்பர்டும் விழுமியம் என்பது விதிமுறைகளைக் கொண்டது. அதன் பெறுமானங்கள் உயர் இலட்சியங்களுடன் கூடியது. விழுமியம் மனிதனிடத்தில் பண்பாட்டை ஏற்படுத்தும். விழுமியம் என்பது ஒரு சமூகத்தில் அதன் அங்கத்தவர்களினால் பயன்படுத்தப்படும் வரையறைகளாகும். இதன் படி விழுமியத்தை ஏற்றுக்கொள்ளல் சமூக நிலவுகைக்கு அவசியம்.

பண்பாடும் விழுமியங்களும் மனித நாகரீகத்தில் முக்கிய பணிகளை நிறைவேற்றுகின்றன. சமூகத்தின் அங்கத்தவர்கள் அச்சமும், சந்தேகமுமின்றி வாழ்வது அவர்கள் பண்பாட்டையும், விழுமியத்தையும் பின்பற்றுவதனாலாயேயாகும்.

பண்பாடானது ஒவ்வொரு சமூகத்தினதும் அங்கீகாரத்தின் மூலமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சமூகப் பெறுமானங்கள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுவது இதனாலாயேயாகும். மனித நடத்தைகள், விதிமுறைகள் மரபு சார் சமூகத்தை நெறிப்படுத்தும் மனித நடத்தை என்பது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை விளக்குவதாகும்.
சமூக மரபு என்பது உள்ளடக்க முடியாத சமூக அங்கீகாரங்களாகும்.

சமூகத்தின் விழுமிய அங்கீகாரங்களைப் பாதுகாப்பது மக்களின் கடமை. ஊடகத்தின் பணியாக அமைய வேண்டியதும் அப்பெறுமானங்களைப் பாதுகாப்பதே ஆகும். அவை குறித்து மக்களை விழிப்பூட்டுவதும், சமூக துர்நடத்தைகளை, பிற்போக்குகளைச் சுட்டிக் காட்டுவதும் மட்டுமின்றி பண்பாடுகளைப் பாதுகாப்பதும் வெகுஜன ஊடகங்களின் பொறுப்பாகும்.

ஊடகங்களில் முன்வைக்கப்படும் நிகழ்ச்சிகளும் அவற்றுக்கு வழங்கப்படும் முக்கியத்துவமும் சமூக விழுமியங்களைப் பாதிக்கும் சமூகத்தின் மைய விழுமியங்களுக்கும் நன்னடத்தைத் தொகுதிகளுக்கும் எதிராகச் செயற்படாதிருப்பது ஊடகங்களின் பொறுப்பாகும்.

### இ) சமூகப் படிமம்

தொடர்பாடலின் பெறுபேறாகவே தோற்றப்பாடுகள் உருவாகின்றன. இன்றைய சமூகத்தில் ஒரு தோற்றப்பாட்டைப் பெற்றுக் கொள்ள ஊடகத்தின் பங்களிப்பு அவசியமாக உள்ளது. பரந்து விரிந்துள்ள மக்கள் சமூகத்திடையே செய்திகளைக் கொண்டு செல்ல ஊடகங்கள் தேவையாயிருப்பதே அதற்கான காரணமாகும்.

பொது சன அப்பிப்பிராயத்தை உருவாக்குவதும் ஒரு பிம்பத்தை உருவாக்கும் வெகுஜன ஊடகங்களின் பணிகளில் வெகுஜன ஊடகங்களால் பிம்பத்தைக் கட்டியெழுப்பும் பணி திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது.

தனியாட்களின் கருமங்களுடாகவே சமூகத் தோற்றப்பாடுகளும் உருவாகின்றன. அங்கீகரிக்கபடபட்ட வழிமுறைகளை மேற்கொள்ளல் மக்கள் கவனத்தை ஈர்த்தல் மூலமாகவே பிம்பம் அல்லது தோற்றப்பாடு கட்டியெழுப்பப்படுகின்றது.

பொதுசன அபிப்பிராயம் பற்றிய எண்ணக்கருவை விசாரணைக்குட்படுத்தும் போது, பிம்பம் கட்டியெழுப்பப்படுவது அவ்வவ் நபரின் பார்வை, எதிர்ப்பார்ப்பு என்பவற்றுக்கு இணங்கிய விதத்திலேயேயாகும். ஒரு தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்பும் வெகுஜன ஊடகம் அதனைப் பாதுகாக்கப் பிரசார நிகழ்ச்சிகளை நடத்தும். சமூகம், அரசியல், கலை, கலாசாரம் வெகுஜன ஊடகம் உட்பட பல துறைகளில் தனியாள் பிம்பங்கள் விருத்தியடைவது, அவர் மக்கள் குழுவில் காட்டும் ஏதாவதொரு திறமை அல்லது பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். இப்பெறுமானம் பொது மக்களுக்காக, நாட்டுக்காக, நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக, நாம் கட்டியெழுப்பும் எறியத்தையும் பொறுத்து பிம்பம் பிரபல்யமடையும்.

இப்பெறுமானங்களையும் ஆற்றல்ககளையும் சவால்களையும் முன்வைத்தும் அப்பிம்பத்தை அங்கீகரிக்கும் மட்டத்துக்குக் கொண்டுவரும் பணியை ஊடகம் செய்யும். இங்கு வெகுஜன ஊடகத்தின் அதிகாரமும் பலமும் பிரயோகிக்கப்படும். பிம்பத்தை உருவாக்குவது போன்றே அதனால் பேணுவதும் பெரும்பாலும் பிரச்சினையாகும். இடம், நிறுவனம், அமைப்பு, கொள்கை என்பவற்றுக்கும் பிம்பங்களுண்டு அவை பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் நீண்ட கால அங்கீகாரத்துக்குட்படுவதன் மூலம் அப்பிம்பங்களுக்கான ஸ்திரததன்மை ஏற்படும்.

புதிதாக ஜனரஞ்சகமாகி தம் சுயபிம்பங்களைக் கட்டியெழுப்ப முனைவோர் மற்றவர் பிம்பங்களை எதிர்த்து விமர்சிப்பதும் இதனாலேயே ஆகும். மனித பிம்பங்களைப பாதுகாத்துக் கொள்வதில் பல சவால்களுண்டு. அரசியல் குழுக்களுக்கிடையே பிம்பங்களுக்கான காரணிகள் பற்றிக் காணப்படும் போட்டிகள் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

ஊடகங்களினால் உருவாக்கப்படும் இப்பிம்பங்களின் யதார்த்தமான தோற்றப்பாட்டைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பெரும்பாலான பிம்பங்கள் வர்த்தக நோக்கத்தைக் கொண்டவை. ஆனால் அவை வெளியே தெரிவதில்லை. பிம்பங்களைப் போலச் செய்தல் சமூகத்தில் பலரின் வழக்கமாகும். எனவே ஒரு பிம்பத்தை உருவாக்கல் என்பது அதனோடு இணைந்த சமூகத் தொகுதியையும் கட்டியெழுப்புவதாகும்.உண்மையில் நிகழ்வது யாதெனில் ஊடங்களால் உருவாக்கப்படுகின்ற பிம்பங்கள் காரணமாக சமூகத்துக்கு ஏற்படும் தீய விளைவுகள் அதிகரித்தலாகும். அதனைச் சரியாகப் புரிந்து கொண்டு வெகுஜன ஊடகத்தைக் கையாள்வதற்காக அந்நிலையை சரியாக பகுப்பாய்வு செய்து கொள்வது அவசியமாகும்.

### ஈ) மோதலும் சமாதானமும்

மோதல் என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அல்லது குழு கூட்டாக அனுமதிக்க முடியாது என்று நம்பும் இலக்குகளை அல்லது அபிலாசைகளை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளும் ஒரு முயற்சியாகும். இதிலிருந்து விளங்குவது வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட தனிநபர்கள் அல்லது குழுக்கள் தம் குறிக்கோளுக்கான ஒரு போராட்டத்தில் ஈடுபடுவதனையேயாகும். இதன் விளைவாக பல முரண்பாடுகள் தோன்றும். முரண்பாடுகளின் அடுத்த படிமுறை மோதலாக இருக்கலாம்.

மாக்சிஸவாத விளக்கத்தின் படி மோதல் என்பது சமூகத்தின் எதிர்காலப் பயணத்துக்குத் தேவையான ஒரு காரணியாகும். அரசு தோன்றியமைக்கான காரணிகளை விளக்கும் மாக்ஸ் இக்கருத்தை முன்வைக்கிறார். இக்கருத்து மோதல் பற்றிய ஒரு நியாயமான தோற்றத்தை முன்வைக்கிறது. மோதல்

என்பது பலமான சமூக நகர்வுகளை ஏற்படுத்துகின்ற பாரிய சமூக அழிவுகளைத் தோற்றுவிக்கும் ஒன்று என்பது தெளிவாகின்றது. அதே போன்று தீமையான செயற்பாடுகள் அதில் அடங்கியுள்ளது. இதன் பின்விளைவாக அவநம்பிக்கை, குரோதம் என்பன தோன்றுவதைக் காணலாம். இதன் பெறுபேறாக மனிதவாழ்க்கையில், வள அழிவு ஏற்படுவதுடன் சமூகப் பிளவும் ஏற்படுகின்றது.

மோதல்களைத் தீர்ப்பதற்காக தேவையான புதிய காரணியாவது, மோதல் எக்காரணத்தால் ஏற்பட்டது என்பதை எடுத்துக் காட்டுவதாகும். வெற்றிகரமான தீர்வுக்கு ஒன்றை உருவாக்கிட உதவும் காரணிகளைப் போலவே தடைப்படுத்தும் காரணிகளிலும் இங்கு கவனம் செலுத்தப்படவேண்டும்.

மோதல் தவிர்ப்புக்கான ஒரு அதிகார பூர்வமான நபர் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை நீண்ட காலமாக இருந்து வருகின்றது. பெற்றோர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், துணை வேந்தர்கள் முன்னிலையில் முரண்பாடுகளை விசாரணைகள் செயவதன் மூலம் மோதல்கள் தவிர்க்கப்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அவ்வாறின்றேல் பலவீனனை தோற்கடித்து பலசாலி வெற்றி பெறும் நிலை ஏற்படும். மோதல் தவிர்க்கப்பட மனித சிந்தனை ஒரு முக்கிய காரணியாகும். மனித மனங்களில் உருவாகும் மாற்றம் மோதலற்ற ஒரு பின்னணியை உருவாக்க ஏதுவாகும்.

இத்தகைய ஒரு சாதகமான சூழ்நிலைக்குத் தேவையான உள அடிப்படையைக் கட்டியெழுப்புவதன் ஊடாக சமாதானம் உவாக்கப்படும். சம அந்தஸ்த்தை அங்கீகரித்தல் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமையைப் பெறல் போன்ற மன இருமைபபாடே அதன் அடிப்படை என்பது ஏற்றுக்கொள்ளத் தக்க ஒரு கருத்தாகும்.

ஊடகவியலாளர்கள் தமது செய்திகளின் அறிக்கையின்போது தொடர்ந்து செய்ய வேண்டியது சமாதானத்துக் கெதிரான மோதலை அதிகரிக்கும் விடயங்களில் கவனமாக இருப்பதாகும். தொழில்சார் ஊடகவியலாளர்கள் இவ்விடயங்களிலும் கவனம் செலுத்தாதிருப்பதுடன் செய்திகளை வெளியிடுவதிலுள்ள போட்டி காரணமாக நிகழ்வுகளை வெளியிட்டு மக்களின் கவனத்தை ஈர்க்க முயல்கின்றனர்.

மோதல்களினால் முறிவடைந்த தொடர்பாடல் இடை வெளிகளை இழிவளவாக்க முயற்சிப்பதுடன் பிழையான கருத்துக்களைச் சரி செய்ய வேண்டும். நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை உருவாக்குவது ஊடகங்களின் பொறுப்பாகும்.

மோதல்களை வரைவிலக்கணப்படுத்தும்போது வீட்டுச் சூழ்நிலைகளைப் மறந்துவிடக் கூடாது. குடும்பக்கதைகளை முன்வைக்கும் தொலைக்காட்சி நாடகங்கள் குடும்ப வாழக்கை என்றுமே மோதல்களைக் கொண்டது எனக் காட்டுகின்றன. குடும்பப் பின்னணியை மிகைப்படுத்திக் காட்டுகின்றன. இவை எந்தளவு அர்த்தமுள்ளவை? யதார்த்தமானவை? என்பதை ஆராய வேண்டும்.

### உ) மானிட விதிமுறைகள்

மனிதர் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் எவை என்பது பற்றி விளக்குவது மானிட விதிமுறைகளாகும். இவற்றை எதிர்காலச் சந்ததிக்கு வழங்கும் பணியை ஊடகங்களே மேற்கொள்ள வேண்டும். நீண்ட காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள் பெறுமானங்கள் செயல்முறைகள், சமய நடவடிக்கைகள், மக்கள் மரபுகளைக் கொண்ட மானிட விதிமுறைகள் இவ்வாறு மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளன.

நெறிமுறைகள் இல்லாமல் போனமை, சமூகத்தை கொண்டு நடத்துவதில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதுடன் அது சமூக முறிவுக்கும் காரணமாக அமையும். உலகின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிகளாக வெட்கமும் பயமும் குறிப்பிடப்படுவது, அவற்றினால் ஏற்படும் விதிமுறைகள் பேணப்படுவதைக் கவனத்திற் கொண்டேயாகும். ஒரு நாட்டின் சட்டங்கள் தீட்டப்படும்போது சமூக விதிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. இவற்றை மீறுதல் தண்டனைக்குரியதாகும். சமூகத்தின் நேரிய நிலைப்பாட்டில் மானிட விதிமுறைகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

ஒவ்வொரு குடும்ப, சமூக அலகுக்குரிய வேறுபட்ட விதிமுறைகள் காணப்படும். மானிட விதிமுறைகளைப் பாதுகாக்க அச்சமுகத்தின் விசேட அவதானத்த்திற்குட்படுவோர். விதிமுறைகளைக் காப்பது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிவகுக்கும். நீங்கள் பழகும் நண்பர் கூட்டத்தில் மானுட விதிமுறைகள் பேணப்பட வேண்டும் என்று புத்த பெருமான் கூறியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் தமது ஊடகங்கள் மூலம் சமூகத்தில் மானுட விதிமுறைகளைக் காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் பேண வேண்டிய ஒழுக்கக் கோவை அவர்களின் சீரான நிலைப்பாட்டுக்காகவே ஏற்பட்டுள்ளது.

செய்திகளை முன்வைக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் இவ்வொழுக்கக் கோவையிலுண்டு. இதனைப் பின்பற்றுதல் ஊடகவியலாளர் நேர்மையாகவும், நியாயமாகவும், சுயாதீனமாகவும், மற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் படியும் நடந்து கொள்ள வேண்டியிருப்பது ஒழுக்கக் கோவையினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலான வரைமுறைகளற்ற விதத்தில் நடந்து கொள்ளும் தொலைக்காட்சி, வானொலி, நிறுவனத்தின் அனுமதி

பத்திரத்தை இரத்து செய்யும் அதிகாரம் அத்துறைசார்ந்த அமைச்சுக்குண்டு. இவ்விடயங்களைக் கவனத்திற் கொண்டு விதிமுறைகளைப் பாதுகாக்கும் போது பல்வேறு மாதிரியைப் பயன்படுத்த ஊடகத்தினால் முடியும். பாடல், நாடகம், செய்தி, கலந்துரையாடல், சிறப்பு நிகழ்ச்சிகள், அவற்றுள் சிலவாகும். சீரான விதிமுறைகள் சமூகத்தில் உறுதிப்படுத்துவதற்காக சமூகத்தில் தாக்கங்கள் உண்டாவதற்கு அவை முறையாக பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும்.

## 5.4 அழகியல் பிரதிநிதித்துவக் கற்கை

ஊடகமும் அழகியலும் எப்போதும் இணைந்தே காணப்படும். வானொலியும் தொலைக்காட்சியும் எப்போதும் போல் அழகியல்சார் நிகழ்ச்சிகளை முன்வைக்கின்றன. அழகியல் ஏன் எமக்குத் தேவைப்படுகின்றது? என்ற வினாவுக்கு முதலில் நாம் விடை காண ஊடக உரிமையாளர்களும் ஊடகவியலாளர்களும் எமக்கு முன்வைப்பது எமது வாழ்வைச் சீராக்க வல்ல அழகியல் நிகழ்ச்சிகளையா? அல்லது எமது இரசனையை மழுங்கடிக்க செய்யும் நிகழ்ச்சிகளையா? என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

### அ) பொழுது போக்குப்பணி

பொழுது போக்கு அம்சங்களை வழங்குவது தொடர்பாடலின் ஒரு நோக்கமாகும். சமூக வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பல்வேறு மன அழுத்தங்கள் ஏற்படுவதுண்டு. இத்தகைய மன அழுத்தங்கள் தொடர்ந்து இருப்பது அவரை அமைதியின்மைக்கு உட்படுத்துவதுடன் சமூக நிலமைக்கும், அது தடையாக அமையும் . இவ்வழுத்தங்களைத் தணிப்பது தொடர்பாடலின் ஒரு நோக்கமாகும்.

இதன் படி ஊடகங்கள் மூலம் மனிதனை மகிழ்விக்கும் நோக்கிலான பொழுது போக்குக் காரணிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். ஒரு நாட்டில் அமைதியின்மை பரந்தளவில் அதிகரிக்கும்போது நடவடிக்கைகளில் காட்டப்படும் முன்னுரிமை விதததில் இருக்கும் என்று கூறலாம். பொழுது போக்குக் காரணிகளை விரிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தம் மன இயல்பு காரணமாக பல்வகையை கொண்டவராக இருப்பதுடன் ஒவ்வொருவருடைய பொழுது போக்கு விதமும் வேறுபட்டதாக இருக்கும். ஆர்வம், கேலி, பகிடி, தனிமை நிலை, மனித உணர்வுகளை வெளிப்படுத்தல், ஆன்மீக மேம்பாடு, வன்முறை, பாலியல் போன்ற பல்வேறு அணுகு முறைகள் இங்கு உள்ளன.

ஒருவருக்குப் பொழுது போக்கினை வழங்குவதன் மூலம் வேறு கலாசாரப் பெறுமானங்களை உள்வாங்குதல், கலாசார ஆக்கிரமிப்புகளை நிகழ்த்துதல், அலங்காரப் பாணிகளை பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான முயற்சிகளுண்டு. ஒவ்வொரு ஊடக உரிமையாளரினதும் அரசியல், மற்றும நிறுவன நோக்கங்களை

நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தகைய உத்திகள் கையாளப்படுகின்றன. பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஆளுமை விருத்தியொன்றுக்கான பண்புகள் இருக்க வேண்டுமென்று கூறப்படுகின்றது. இங்கு பொழுது போக்கு அம்சங்கங்களை வழங்கும்போது குறிப்பிட்ட அளவு அனுபவத்தை மையமாகக் கொண்டு அவை அமைவதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அபிவிருத்தித் தொடர்பான நிகழ்வுகளிலும் பெரும்பாலும் எளிமையான விரும்பக்கூடிய தன்மையை ஏற்படுத்த முடியும். இவற்றில் பொழுது போக்குஅம்சங்களைச் சேர்ப்பதன் அவசியத்தைச் சமூக வியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். சிறுவர், இளைஞர், அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் போது ஆக்க ரீதியான, பொழுது போக்கு அம்சங்களை இணைப்பதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

## ஆ) இரசனை

இரசனை என்பது சுவையை இனங்காணும் அறிவாற்றலாகும். அதாவது தனியார் இரசனைகள் மீதான அழகியல்களை அது உருவாக்கும். இரசிகர்களை உருவாக்கும். இரகசிகர்கள் இல்லாத போது அழகியல் ஊடகத்தால் நீடித்து இருக்க முடியாது. ஒருவரின் இரசனை ஆற்றல் உயர் மட்டத்தில் இருத்தல் அச்சமூக நிலைப்பாட்டின் மீது செல்வாக்கை ஏறபடுத்தும் உயர்தரமான இரசனையைப் போன்றே ஜனரஞ்சக இரசனை பற்றியும் கற்க வேண்டும்.



படம் 5.4.1:- சிறுவர்களின் கலை நிகழ்ச்சி

எந்த ஒரு அழகியல் படைப்பும் சமூகத்தைக் களமாக கொண்டதாகவே அமையும். சமூகப் பெறுமானத்தை உணர ஒருவரால் முடியுமானால் அத்தகைய அச்சமூகத்தினரின் இரசனை உணர்வு உயர்ந்ததாக காணப்படும். மனிதன் ஐம்புலன்களாலும் இரசனையைப் பெறுகிறான். அதன் இனிமையில் அவன் கவரப்படுகின்றான். இரசனை என்பது உணர்வைப் பொறுத்தது. ஆயினும் இரசனை என்பது உணர்வுகளையும் விஞ்சியது. இரசனை பற்றிய மேலைத்தேய கீழைத்தேய கலை விமரிசர்களிடையே கருத்துவேறுபாடுகள் உள்ளன. மார்க்ஸிஸவாத விமரிசகர், நவீன, பின்நவீன விமர்சகர்கள் இதனைப் பல்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்துகின்றனர்.

உயர் இரசனையை மக்களிடத்தே ஏற்படுத்துவதில் வெகுஜன ஊடகத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

### இ) கட்டுருவாக்கச் சிந்தனை

ஆக்கம் என்பது படைப்பாகும். அத்தகைய ஒரு படைப்புச் சிந்தனையுடன் இருப்பது கட்டுருவாக்க சிந்தனை எனப்படும். ஆக்கச் சிந்தனை என்றும் இது அழைக்கப்படும். இது ஒரு அரிதான திறனாகும். கவிதை ஆற்றல், படைப்பாற்றல் ஆக்க சக்தி என்று இது குறிப்பிடப்படுகின்றது.

''உலகில் மனிதன் ஒரு அரிதான உயர் நிலையாகும். மனிதனும் அறிவியல் பலம் பெறுவது மேலும் அரிதாகும். அறிவியல் ஞானத்திலும் நல்லுறவு அதனை விட அரிதாகும். கவிதை புனையும் ஆற்றல்கள் எக்காலத்திலும அரிதாகப் போற்றப்பட்டுள்ளன.

கல்வியில், மாணவர்கள் ஆக்கச் சக்தியைக் கட்டியெழுப்ப பாரிய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்க கட்டுருவாக்கச் சிந்தனை பலமான ஒரு காரணியாகக் கருதப்படுகின்றது.

கட்டுருவாக்கவாதிகள் தம் அனுபவங்களை ஆக்கத்திறனுக்காகப் பயன்படுத்த்திக் கொள்கின்றனர். தனது அனுபவங்கள், பிறரது அனுபவங்கள் ஊடாக அனுபவங்கள் என மூன்று அனுபவ வகைகள் காணப்படுகின்றன. இவ்வனுபவங்களின் ஊடாக உண்மையை விளங்கிக் கொள்வது படைப்பாளரின் பணியாகும். அந்த உண்மையில் நின்று ஆக்கச் சிந்தனையில் ஈடுபட வேண்டும். சிந்தனை என்பது, உள்ளத்தில் ஒன்றை கட்டுருவாக்கச் சிந்தனையில் உதித்த பின் ஊடகங்கள் மூலம் வெளியிடப்படுவதாகும்.

தான் ஆக்கத்தை முன்வைப்பது எந்த ஊடகத்தின் மூலம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அப்போது அவ் ஊடகத்துக்கேற்றவாறு சிந்தனையை நெறிப்படுத்த முடியும். அது முன்வைக்கப்பட்ட பின்னர் பயனாளியின் அனுபவமாக மாறும். இங்கு ஒவ்வொரு ஊடகத்தின் ஆற்றலையும் அறிந்திருப்பது மிக முக்கியம்.

கட்டுருவாக்கச் சிந்தனை என்பது வியத்தகு ஒரு விடயமாகும். எனினும் அது அர்த்தமுள்ளதாக இருப்பது முக்கியமாகும். ஆக்க இலக்கியத்தின் இறுதி இலக்கு இரசனையின் பிறப்பாகும். இரசனை என்பது பயனாளி அடையும் தற்காலிக மகிழ்ச்சி அன்று. உலகின் வாழ்க்கைப் பிரச்சினையை எதிர்க்கொள்ளும் பலத்தை மனிதன் அதன் மூலம் பெறுகின்றான். உன்னதமான குறிக்கோள் அடைவிற்குள் பிரவேசிக்கின்றான்.

வெகுஜன ஊடகம் படைப்பாற்றலுடன் ஒன்றித்துள்ளது. வெகுஜன ஊடகத்திடையே நிலவும் கடும் போட்டிகாரணமாக கட்டுருவாக்கம், அத்தியாவசியக் காரணியாக மாறியுள்ளது. ஆக்கச் சிந்தனை புதிய கருத்துக்களைப் பிரதிபலிதக்காததால், அத்தகைய ஆக்க திறன்களைக் காண்பது மிகவும் அரிதாகவேயுள்ளது.

## ஈ) அழகியலும் சமூகநோக்கும்

அழகியல் என்பது நளினமானது. மனதை மகிழ்விப்பது, அழகானது, மனங்கவர் தன்மை மிக்கது என்றும் அதனைக் கூறலாம். சமூகத்தைப் பற்றியதான அறிவு சமூக நோக்காகும். அது நுண்ணறிவின் ஓர் அணுகுமுறையாகும்.

சங்கீதம் நாடகம், பாடல், ஆடல், கவிதை, இலக்கியம், செதுக்கு, சிற்பம் ஆகிய பல்வேறு வடிவங்களில் அழகியல் முன்வைக்கப்படும். இவை கருத்து வெளிப்பாட்டுக்கான தொடர்பாடல் ஊடகங்களாகும். புலன்களைப் புலங்கிதமடைய வைக்கும் ஆர்வத்தைத் தூண்டும் ஆற்றலும் அழகியலுக்குண்டு. அழகியல் மூலம் இரசனை தோற்றுவிக்கப்படும்.

பௌத்த சிந்தனையின்படி அழகியல் ஆன்மிகஅழகியல், வெளியகஅழகியல் என்று இருவகைப்படும். தேன் இருப்பதன் காரணமாகவே வண்டுகள் மலரை நாடி வருகின்றன. தேன் மணத்தில் வண்டு கவரப்பட்டு அழகியல் என்ற சுவையை நாடியே வருகின்றன. இந்த உதாரணத்தின்படி ஒரு செய்தியில் அல்லது நிகழ்ச்சியிலுள்ள அழகியற்தன்மை , பயனாளியைக் கவர்கின்றது என்பது தெளிவு. சமூகம் பற்றிய அறிவை விரிவுபடுத்துவதற்காக அழகியலை ஒரு கருவியாக பயன்படுத்த முடியும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சமூகத்தைப் பற்றிய சரியான நோக்கமின்மை சமூக அபிவிருத்திக்கு தடையாக அமையும். ஊடுருவிப் பார்ப்பதற்கு யதார்த்தத்தை விளங்கிக் கொள்வதற்கு அழகியல் பெருமளவில் துணை புரிகின்றது. ஊடகவியலாளர் என்பவர் துல்லியமான உணர்வுகள் நிறையப் பெற்றவராக இருத்தல் வேண்டும். ஏனையவர்கள் காணாதவற்றை அவர் காண முடிவது அப்போதுதான்.

பரிநிர்வாண நிலையை அடைவதற்காக. தியானம் செய்வதற்குத் தெரிவு செய்த புத்தகயாவில் அமைந்துள்ள அழகிய வனத்தொகுதியை புத்தபெருமான் மிகவும் வர்ணித்துப் பேசியுள்ளார். அழகியலானது ஒருவரில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது என்பது இதிலிருந்து விளங்குகிறது.

அண்மைக்காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட அருங்கலைகளின் முன்னேற்றத்திற்கு 1934 இல் ரவிந்தரநாத் தாகூர் இலங்கையில் மேற்கொண்ட விஜயம் காரணமாக அமைந்ததாக கூறப்படுகின்றது. அவரின் விஜயத்தினால் ஏறபடுத்தப்பட்ட கலை மற்றும் அழகியல் தூண்டலை 1934 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதியில் வெளியான டெய்லி நியூஸ் பத்திரிகை பாராட்டியிருந்தது.

கலை இரசனை நலிவடைவதால் ஏற்படும் இறுதிப் பெறுபேறு மக்களிடையேயுள்ள அழகியல் உணர்வு மங்கிப் போவதாகும். இலங்கையர்கள் இவற்றிலிருந்து எந்த அளவு தூரமாகியிருந்தனர் என்றால் அவர்களிடம் அததகைய உணர்வுகள் இருந்தது எனபதைக் கூட அவர்கள் அறியாதிருந்தனர். அவை முற்றிலும் மறந்துபோகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

எம்மிடையே நினைவிலுள்ள எந்தக் காலப்பகுதியிலும் ஏற்படாத கலை உணர்வுகள் வேகமாகத் தூண்டப்பட்டமைகு நாம் ரவிந்திரனாத் தாகூருக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

எமது தனித்துவமான அழகியல் அணுகுமுறைகளுடாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய சமூக விளக்கம் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். சமூக விமர்சனத்தில் ஈடுபட முடியாத ஒரு பரம்பரையினர் உருவாகுதல் துரதிர்ஷ்டமான நிலையாகும். அழகியல் ரீதியான இரசனை ஆற்றலை விசேடமாக இளம் பிராயத்தினர்களிடையே ஏற்படுத்த வெகுஜனஊடகங்கள் முன்வர வேண்டும்.

வெகுஜனஊடகங்கள் தொடர்பாக நோக்கினால், இது ஒரு பலம் பொருந்திய செல்வாக்காகும். எந்தவொரு தொடர்பாடல் வழியில் கிடைக்கப் பெற்றாலும் பயனாளியிடத்தில் அது பரிணாமமடையும் விதமே ஒரு செய்தியாகும் என மார்ஷல் மகலூன் விளக்கியது இதனாலாகும். வெகுஜன ஊடகங்களின் செல்வாக்கைப் பற்றி ஆராயும்போது செய்தியானது எம்மைச் சுற்றியுள்ள உலகத்தை விளங்கிக் கொள்ள உதவும் ஒன்றாகும். ஒருவரைப் பாண்டித்தியசாலி ஆக்குவதற்கு உதவும். புலன்களை உயிர்ப்பிக்கும். மொழியில் சொற்களுண்டு எனினும் அவற்றைப் பயன்படுத்தும்போது செய்தியாக மாறுவதை விளங்கிக் கொள்ள வேண்டும். மேற்படி விளக்கங்கள் அழகியல் சார்ந்த செய்திகளின் செல்வாக்கை விளக்குகின்றது.

**ஒப்படை 5**

1) தொடர்பாடலுக்கும் குடும்பக் கட்டமைப்புக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குக.
2) சந்தையின் மீது, தொடர்பாடல் ஏற்படுத்தும் செல்வாக்கை விபரிக்குக.
3) பயன்பாடுமிக்க சமூகமொன்றை உருவாக்க தொடர்பாடலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.
4) 'தொடர்பாடலின் மூலம் இரசனையை விருத்தி செய்யலாம்' என்பது பற்றிய உங்கள் கருத்தைக் தெரிவிக்குக.
5) உங்கள் கிராமத்தைப் பற்றி பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக ஒரு சிறப்புக் கட்டுரையைத் தயார் செய்க.

